உ

கடவுள் துணை

பிர்மகுல பதிவிரதா சிரோன்மணியாகிய

பார்வதியம்மாள்

கண்ணுச்சாமி நாடானைக்

கழுத்தரிந்த சிந்து.



மதுரை புத்தக வியர்பாரம்,

டி. கிருஷ்ணசாமி பிள்ளை விருப்பத்தின்படி

மதுரை புத்தக வியாபாரம்,

எம். ஏ. ஹார்தி அவர்களால்

வெளியிடப்பட்டது.

மதுரை ஷம்ஸியா பிரஸ் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1924. [அணா 0-1-0.

உ

கடவுள் துணை.

பிரமகுல பதிவிரதா சிரோன்மணியாகிய

பார்வதி அம்மாள்

செய்தகுலைச்சிந்து.

வெண்பா.

கண்ணுசாமி நாடாரைக் கழுத்தரிந்த விந்தை சொல்ல
பொன்னுசாமி பிள்ளைதினந் தொந்திரவால்—யந்திரத்தில்
அச்சிட்டு வெளியாக்கி யனுதினமும் விலைசெய்தால்
மெச்சிடுவா ரென்றுகதை கமீட்டு.

தெம்பாங்கு.

சத்திவிநாயகனே சண்முகர்க்கு மூத்தவனே
உத்தமியின் கதையைச்சொல்ல உள்ளமதில் வாருமையா
கன்னிகுலைக்கேசு விலை சொன்னேன்ஆறுகாசு

திருநெல்வேலி ஜில்லாவாம் தெற்கேவெகுதூரமாம்
அருமையான தாம்பரபரணி ஆறுஓடும் ஊரைச்சென்னேன் (கன்)

பாபவிநாசமதில் பிரமகுல பார்வதிபெண்
கோபமாய் செய்தகுலை கூறிடுவேன் நேசர்களே (கன்)

விருப்பாக்ஷி அய்யரவர் வெகுநாள் தவமிருந்து
அருமையான பெண்குழந்தை அவதரித்தாளய்யருக்கு (கன்)

பார்வதி அம்மாளென்று பலபேருந்தானழைக்க
பேர்வைத்துக்கொண்டாரையா பெற்றவர்கள் பிரியமுடன் (கன்)

ஈயெரும்புநாடாமல் இடருவொன்றும் நேராமல்
தாயாரும் பார்வதியை தாலாட்டி வளர்த்துவந்தாள் (கன்)

அஞ்சுவயதானவுடன் அக்ஷணமே பள்ளிதனில்
கொஞ்சிகுலாவிவெகு வித்தைகளைதான்படித்தாள் (கன்)

சுப்ரமணிய அய்யரவர் சுருக்காக ஏதுசெய்தார்
பிரபஞ்சத்தோர் தானரிய பெண்மணியை மாலையிட்டார் (கன்)

புருஷனவர் சொல்லும் வார்த்தை பெண்மணியுந்தள்ளாமல்
அருமையாக ரெண்டுபேரும் அரசரைப்போல் வாழ்ந்திருந்தார் ()

பெண்ணைபுருஷன் மரவார் புருஷனையும் பெண்மறவாள்
சொன்னசொல்லை தவறுமல் சுகமாய்வாழும் நாளையிலே (கன்)

அய்யருக்கு நேசனும் அதிகவிசுவாசனும்
மெய்யனைப்போல்கண்ணுசாமிதையலின்மேல்மோகங்கொண்டான்

அய்யர் மனைவியின்மேல் ஆசைமிகத்தானுங்கொண்டு
வெய்யலாயிருந்தபோதும் வந்துகண்டு சென்றிடுவார் (கன்)

வேலைக்கொரு உடுப்பு விதவிதமாய் தானுடுத்தி
காளையவன்வீட்டுக்குள்ளே காத்திருப்பான் என்னேரமும் (கன்)

அய்யர்வீட்டில் குந்திகொண்டு அற்பகுணநாடாரிவர்
தையலரைப்பார்த்துபார்த்து தலைகுனிந்துகொண்டிருப்பான் (கன்)

திருடனைப்போல் முழித்துக்கொண்டு தீரமுடன்கண்ணுசாமி
ஏறுவருடம் நாடானுக்கு மனதில்வந்த யோசனைபார் (கன்)

வண்டியோட்டும் கோச்சுமேனை கண்டுரூபாய் தந்தோமானால்
கொண்டுவந்து சேர்த்திடுவான் கோதையரை பங்களாவில் (கன்)

என்று எண்ணி நாடாரும் யேகிவந்துலாயத்துக்குள்
நின்றுகொண்டு சொன்னவார்த்தை நேசர்களேகேளுமையா (கண்

முத்தாஒருசேதி முன்னேசொல்ல வேணுமென்று
யெத்தனஞ்செய்திருந்தேன் யெந்தன்வார்த்தை கேளடாநீ (கன்)

சேதியென்ன சொல்லுமென்று சின்னமுத்தன் கேட்டவுடன்
ஆதிசிவன் மேலேவொரு ஆணைவைத்தால் சொல்வேனென்றான்()

ஆதிசிவன் சாக்ஷியாக அன்பரே நீர் சொல்லுமென்று
வாதிமுத்தன் கேட்டவுடன் யேதுசொன்னார் கண்ணுசாமி (கன்)

அய்யர் மனைவிதன்னை அழைத்துவந்து பேசவைத்தால்
அய்யாயிரங்கேட்டபோதும் அட்சணமே தாரேனென்றார் (கன்)

எந்தவிதம் யானழைப்பேன் எடுத்துரையுங் கண்ணுசாமி
தந்திரங்கள் சொன்னபோதும் வந்துபேச மாட்டாளையா (கன்)

எப்படியாகிலும் நீயே இட்டுவந்து எந்தனிடம்
ஒப்படைக்க வேணுமென்று ஓராயிரம் ரூபாய் தந்தான் (கன்)

வக்கீல்மனைவியவள் பக்கிரியான் என்னசெய்வேன்
தக்கவொரு யோஜனையை பக்குவமாய் சொல்லுமென்றான் (கன்)

கண்ணுசாமிநாடாருக்கு கஷ்டப்பட்டு அய்யாவர்
பன்னீராயிரம் ரூபாய் பங்குவாங்கி தந்ததினால் (கன்)

அய்யருக்கும் உங்களுக்கும் ஆசைமரியாதைசெய்ய
வெய்யகத்தோர் தானறிய வந்துபோகச் சொன்னாரய்யர் (கன்

இந்தவார்த்தை சொன்னவுடன் வந்திடுவாள் பார்வதியும்
தந்திரமாய் கொண்டுவந்து எந்தனிடம் சேருமென்ருன் (கன்)
ஆயிரத்தை வாங்கிக்கொண்டு ஆசையொடு கோச்சுமேனும்
பாவியிவன் வோடிவந்து பார்வதிக்கு யேதுரைப்பான் (கன்)

நொண்டிச் சிந்து.

அம்மா ஒரு சேதிகேளும், அய்யரவர்- ஆறுமாதகாலமாக அவஸ்தைப்பட்டு, கண்ணுசாமி நாடாருக்கு-பன்னீராயிரம்ரூபாய் பங்கு வாங்கியிவர் தந்தவுடனே- அரியாதபாலனவனும், உங்களுக்கு மரியாதை செய்வேனென்று தெரியச்சொன்னான்-அய்யரவர்தான் கேட்டு, உந்தனை- அழைத்துவரும்படியாய் அனுப்பிவைத்தார்- அடியேன் ஓடிவந்தேன், சீக்கிரம்- ஆடையை உடுத்திக்கொண்டு வோடிவருவாய்- என்றுசொல்ல பார்வதியும், உடனே -எழுந்து முகமலம்பி திலர்தமிட்டு- பட்டுசேலை தானுடுத்தி, உத்தமியும்- பாக்குவெத்திலை சுன்னம் கைபிடித்து- முத்தனை தானழைத்து, வண்டியை- முடுக்காகவோட்டுமென்று ஏரிவிட்டாள்- தட்டினான் மடப்பயலும், குதிரை - ஓட்டமிட்டு ஓட்டமாக ஓடினது பார்- கண்ணுசாமி தோப்படுத்தான், பங்களாவில்—அய்யரும் நாடாரும் அமர்ந்திருப்பார்- போய்வாறுமென்றுரைத்து, கோச்சுமேன்- பார்வதியை விட்டுவிட்டுஓடிமறைந்தான்-கண்ணுசாமிதான்கண்டு உடனே கதவை மூடிக்கொண்டு ஏதுரைப்பான், (தந்தின)

கண்ணுசாமிநாடாருக்கும் பார்வதியம்மாளுக்கும்தர்க்கம்

உடுமலையின் முத்துச்சாமி பாட்டை என்ற வர்ணமெட்டு.

ஆறுமாதமாகஉன்மேல் ஆசை நான்
அழித்திட்டேன் இருந்ததோர் காசை
ஆசை நாயகியே யிப்பொழுது பக்ஷமுடன் வந்துயென்னை
சேறு பதில் கூறு

சேறுவதால் என்ன குடி கேடா என்னை
சேர்ந்தாலே பழிவருகும் போடா நான்
சொல்லும் வார்த்தை கேட்டுநீயும் மல்லுக்கிழுக்காமலங்கு
நில்லு பதில் சொல்லு

காமபாதையினால் மாதே உன்னை
கண்டுமயங்கினேனடி கோதே வந்து
தாமதங்கள் செய்யாமலே காமியரே எந்தனை நீ
கூடு சுகம் தேடு

அய்யருக்கு நேசமாக வந்தாய் வெகு
ஆசையென்மேல் வைத்துநீயும் நொந்தாய் அந்த
மெய்யனிட சாட்சியாக கையுங்கால் குறைந்துவிடும்
அண்ணே பதில் சொன்னேன்
கைகால் குறைந்தாலென்ன போடி என்னை
கட்டியணைந்து முத்தம் தாடி அடி
தையலரே எந்தனிட சையோகங்கள் செய்திடுவாய்
மாதே அடி கோதே
சினேகித துரோகங்கள் விடாது நான்
சொல்லும்வார்த்தையுன்செவிக் கேறுது சிறு
பெண்ணுசொல்லும்வார்த்தைகேட்டு கண்ணுசாமிஉன்மனதை
அடக்கு வாலை மடக்கு

பார்வதியம்மாள் கண்ணுசாமி நாடாருக்கு புத்திசொல்லல்
நொண்டிச்சிந்து.

நாடாரே என் வார்த்தை கேளும்- தற்சமயம் நங்கை யெந்தன் மேலே மோகங்கொண்டபடியால் தடைசெய்யமுடியாது- தரணியில்- பெண்ணாலே கெட்டவர்கள் கோடிபேருண்டு, அகலிகை சாபத்தினால், இந்திரன்-அங்கமெல்லாம் நேத்திரமாய்பொங்கியே நின்றான்- லங்கைக்கரசனென்போன் ராவணன் பெற்ற பெண் சீதைமேலே மோகத்தைக்கொண்டு -பாதை பட்டதை யரிய லையா திரியோதிரன் துரோபதைமேல் ஆசைவைத்த குரோதத்தினால் பாரதம் முடிந்ததென்பார்- தமயந்தியை காட்டினில், வேடன் மடக்கும் சமயமதில் உத்தமி வரம்பலத்தால் தமயந்தி வேடனையும் சாம்பலாக போம்படி செய்தாள் - இன்னுமனேக முண்டு இதைப்போல் என்புருஷன் கண்டுவிட்டால் என்னவருமோ, கண்ணுசாமி நீதுணையே, இப்பொழுது செப்பினகதைக்கு மனம் திடுக்கிடுதே, உந்தனின் ஆசையைத்தீர்த்தால். நாடாரே யெந்தனுக்கபாயம் வந்தால் யேதுசெய்வாய், இதற்கு நீ பதில் கூறு, இந்தக்ஷணம் பார்வதியாள் வந்து உந்தன் மோகந்தணிப்பேன். தந்தினத் தனதினனு

கும்மி.

பார்வதியம்மாளும் சொன்ன மொழிகேட்டு
பாலன் கண்ணுச்சாமி யோசியாமல்
கார்த்திடுவேன் யெந்தன் மோகந்தணிந்தபின்
கைவிடேன் பாரடி பெண்ணேயென்றான்.

உந்தன்மேல் ஆசையை கொண்டமுதற்கொண்டு
உண்ணவுறங்கவும் கூடவில்லை
எந்தனாசையை கெடுக்கவேண்டாம் பெண்ணே
யிக்ஷணம் சேரடி யென்றுரைத்தான்.

சட்டெனப்பார்வதி நாடாரைக்கண்டுபின்
சந்தோஷமாகவே யேதுரைப்பாள்
வெட்டியிள நீரைத் தந்தீரானால் விடாய்
தீர்த்துக்கொண்டு வாரேன் என்றுரைத்தாள்

மோகக் கொடுமையால் கண்ணுசாமிநாடார்
வேகமுடன் இளநீரைவெட்டி
தாகத்தைத் தீரடி என்றுசொல்லி காயை
கைதனில் தந்தாரம் நேசர்களே.

நாடார்மேல் மோகத்தை கொண்டவள் போலாக
நங்கைசிறித்துபின் னேதுரைப்பாள்
வாடாமல் என்கையில் கத்தியை தந்திடு
வெட்டியிளநீர் குடிப்பேனென்றாள்.

கத்தியைக் கைதனில் வாங்கிக் கொண்டு மாது
கடவுளைமனதில் தானினைத்து
பத்தாவுக் கேற்றதோர் உத்தமி நானானால்
பாதுகார்க்கவேணுமென்றழுதாள்.

ரெண்டு இளநீரை வெட்டி வைத்துமாது
அண்டையில் நாடாருக் கேதுரைப்பாள்
சண்டைசச்சரவு யில்லாமலே எனை
சாகுமட்டும் காருமென்றுரைத்தாள்.

கடலாழங்கண்டு கணக்கிடலாம் கன்னி
மனமாழங்காண முடியாதென்ற
திடமதை நாடாரறியாமல் ஜெக
தீசன்ஆணையாக கார்ப்பேனென்றார்

இளநீர் ஒன்றையுந் தான்குடித்து
இரண்டாவது இளநீர் கைகொடுத்து
பலனிதயோசனை செய்யவேண்டாம் வுந்தன்
பத்தினிபோலென்னைக் காருமென்றாள்.

கையிலிளநீரை வாங்கியே நாடாரும்
கன்னிமேல் சந்தோஷந்தானுங்கொண்டு
தையலே உன்மனம் போலே இளநீரை
தாகந்தணிக்குரே னென்றுரைத்து

இளநீரை நாடான் குடிக்கையிலே மாது
எழுந்தாளே காளிபோல் ரூபங்கொண்டு
நீலமேகவர்ணன் இரணியசம்மாரம்போல்
நெஞ்சருந்துபோக வெட்டினாளாம்.

வெட்டுப்பட்டவுடன் நெஞ்சறுந்து பின்
வேகமாய் நாடாருங்கூச்சலிட்டு
பொட்டென பூமியில் சட்டென விழுந்து
போனார் எமலோகம் நேசர்களே.

சந்தோஷமாகவே பார்வதியம்மாளும்
சாத்திக்கதவையும் மூடிக்கொண்டு
வந்தவழிதேடி வண்டியோட்டிக் கொண்டு
வந்துசேர்ந்தாள் போலீஸ் நேசர்களே

போலீஸ் இனுஸ்பெக்டர் ஏட்டுகளிடத்தில்
புத்தியுள்ள மாது வந்துநின்று
வேலைக் காரனால் நடந்தவிதிவசம்
வேந்தரே வந்து நீர்பாருமென்றாள்

புருஷனுக்குசேதி சொன்னாரே அய்யர்
பொல்லாத கோபமாய் வந்தாரே
அருமை மனைவியை கண்டுவிட்டு அய்யர்
அழுது புலம்பினார் நேசர்களே.

மன்னவா நீர்செய்த நாடான் சினேகிதம்
மங்கையர்க்கிவ்விதம் நேர்ந்துதையா
முன்னமே நம்மிட முத்தன் கோச்சுமேனை
சொன்னேன் பிடியுங்களென்றழுதாள்

இனிஸ்பெக்டர் ஏட்டுகள் போலீசாருடனே
எல்லோருமொன்றாய் கூடிக்கொண்டு
கூனிசெய்தயிடம் வந்து கண்டுகொண்டு
கோச்சுமேனைக் கண்டு தேடலுற்றார்.

பாபவினாசம் ஜனங்கூடி கும்பல்
பார்வதியம்மாளைக் கண்டழுது
ஆபத்துசெய்யவோ கண்ணுசாமி நாடான்
ஆறுமில்லாத்தோப்பு கொண்டுவந்தான்

இந்தவிதஞ்ஜனங்கூட்டங்கூட்டமாக
நின்றவிடமெல்லாம் பேசிருந்தார்
தந்திரமாகவே கோச்சுமேனையவர்
தேடிப்பிடித்தாரும் நேசர்களே

சோதனை டாக்டரும் செய்தாரே பிணம்
சொந்தபந்துகையில் தந்தாரே
வீதிதனில்வெகு வேடிக்கையாகவே
வீரனைக் கொண்டு கொளுத்திவிட்டார்

முத்தன் வாக்குமூலங் கேட்டாரே
இந்தமூடனை லாக்காப்பில் வைத்தாரே
இத்தரை மீதினில் ஜூரிலாயர்கூடி
யோசனைசெய்துபின் யேதுசெய்தார்.

கொண்டுவந்து பரமுத்தனையுங்குலை
யாளிகள் பாரினில் நிற்கவைத்து
சண்டாளன் செய்ததோர் குற்றமதைக்கெண்டு
சர்க்காரில் தண்டனை யேதளித்தார்

சாவளவும்சிக்ஷை தந்தாரே ஜட்ஜீ
சந்தோஷமாக வெழுந்தாரே
ஆவியைப்போக்கின அய்யர் மனைவிக்கி
அன்போடுவந்துபின் னேதுசெய்தார்.

ஜட்ஜீலாயர்களும் ஜூரியுடன் முதல்
சகலஜெனங்களுங் கூடிக்கொண்டு
பக்ஷமுடனாக பார்வதியம்மாளை
மெச்சியே ஜட்ஜ்மெண்டேதளித்தார்

தங்கத்தோடார்வையும் போட்டாரே கையில்
சவையினால் மெடலும் தந்தாரே
எங்கும்புகழவே சிங்கமென்று சொல்லி
இட்டாராம் பேரையும் பார்வதிக்கு

பத்தாவுக்கேற்ற பதிவிரதை யென்று
பாபவினாசத்தில் கூச்சலாச்சு
புத்தியில்லாமலே கண்ணுசாமி நாடார்
போனார் எமலோகம் பெண்மணியால்

பொய்குலை சூது செய்யாதீர் பிறர்
பெண்ஜாதிமேல் மோகங் கொள்ளாதீர்
மெய்யனைவேண்டினால் வையகத்தில் நாமும்
மேன்மையடைகுவோம் நேசர்களே.

விள்ளுவதெல்லா மறந்துவிட்டு யிவன்
சொல்லைப்போல் நடக்கேனென்றுரைத்தால்
வெள்ளரிக்காய்தொட்டு தின்றகதையைப்போல்
வீணர்கவனிக்க வேணுமென்றேன்.

பார்வதியம்மாளும் செய்தகுலையதை
பாரினில் யாவருங்காணவேதான்
சிறுமணலூர் முனிசாமி சீடன் சூளை
மாணிக்கம்பாடியே யச்சடித்தான்.

பார்வதியம்மாள் குலைச்சிந்து முற்றிற்று